www.tamilarangam.net



### வன்னிப் பகுதியில் வேதனைக் குரல்

# அடிமை நிலையிலிருந்து விடுதலை வேண்டும்

## புனர்வாழ்வுச் சபைக்கு கென் பண்ணைத் தமிழ் அகதிகளின் உருக்கமான வேண்டுகோள்

வவுனியா, நவ. 12

நெடுங்கேணி கென் பண்ணையில் உள்ள தமிழ் அகதிகள் வேதனைக் குரல் எழுப்புகிறார்கள். அடிமை நிலையிலிருந்து தமக்கு விடுதலை வேண்டும் என்று தமிழ் அகதிகள் புனர்வாழ்வுச் சபையிடம் மன்றாடுகிறார்கள்.

1977 ஆகஸ்ட் கலவரத்தால் பாதிக்கப்பட்டவர்கள் பலர் அகதிகளாக அச்சுவேலி முகாமில் வைக்கப்பட்டிருந்தார்கள். அவர்களில் பலர் கடந்த வருடம் நவம்பரில் புனர்வாழ்வு அளிப்பதற்காக நெடுங்கேணியில் உள்ள கென் பண்ணைக்குக் கொண்டு செல்லப்பட்டார்கள். அகதிகளில் பலர் இந்திய வம்சாவளித் தமிழர்கள் ஆவர்.

அங்கே தமக்குப் புனர்வாழ்வு கிடைப்பதற்கு மாறாக, அடிமை வாழ்வு கிடைத்திருக்கிறது என்று அகதிகள், புனர்வாழ்வுச் சபைக்கு முறைப்பாடு செய்திருக்கிறார்கள்.

அகதிகள் பலர் கூட்டாகக் கையொப்பமிட்டு, புனர்வாழ்வுச் சபைக்கு அனுப்பியுள்ள மகஜர் ஒன்றில் பின்வருமாறு தெரிவித்திருக்கிறார்கள்:

"கடந்த 17.11.77 இல் எங்களை அச்சுவேலி முகாமிலிருந்து இங்கே கொண்டு வந்தார்கள். எங்களுக்கு வாழ்வு அளிப்பதாகக் கூறியே கொண்டு வந்தார்கள். குடியேறறத் திட்டத்தில் இடம் தருவதாகக் கூறிக் கென் பண்ணையில் எங்களை இருத்தினார்கள். ஒரு வருடமாகியும் எங்களை அடிமைகளாகவே வைத்திருக்கிறார்கள்.

"எங்களுக்காகக் கொண்டு வந்த துணிமணிகளை எல்லாம் விற்றுவிட்டார்கள்.

"நாங்கள் இருக்கும் பண்ணையில் கிணறு வெட்டவும், வீடு கட்டவும் கொண்டு வந்த சீமெந்து பைக்கட்டுகள் பல மாயமாக மறைந்து விட்டன. சிறு குழந்தைகள் பருகப் பால் இல்லாமல் கஷ்டப்படுவதைப் பார்த்துச் சகிக்க முடியவில்லை.

"ரூபா 35 ஆயிரத்துக்கு சபை மூலம் அனுப்பப்பட்ட மாடுகள் இங்கே சரிவரக் கவனிப்பாரின்றிக் கிடக்கின்றன.

"எங்களுக்காகக் கொண்டு வந்த டிராக்டரைப் பிரத்தியேக வாடகைக்கு விடுகிறார்கள். நாங்கள் இருக்கும் காணியில் ஏதாவது பயிர் செய்வதற்கு டிராக்டரைக் கொண்டு வந்து உழச் சொன்னால் செய்கிறார்கள் இல்லை. ஒரு முறைக்குப் பல முறை சொல்லியும் கேட்கிறார்கள் இல்லை.

"நாம் இருக்கும் காணிகள் இன்னும் எங்களுக்குப் பகிர்ந்து அளிக்கப்படவில்லை. அவற்றில் நாம் உரிமை கொண்டாட முடியவில்லை.

"ஒரு சில குறிப்பிட்ட குடும்பங்களுக்கு மட்டும் இங்கே சலுகை செய்கிறார்கள். அந்தக் குடும்பத்தவர்களின் வயல் காணிகளை விதைத்தும் கொடுக்கிறார்கள். மற்றவர்கள் புறக்கணிக்கப்படுகிறார்கள்.

"பண்ணையில் வேலை செய்யும் ஆண்களுக்கு நாட் சம்பளமாக 7 ரூபாவும் பெண்களுக்கு 5 ரூபாவும் தருகிறார்கள்.

"ஏழு, எட்டுப் பேர் உள்ள குடும்பங்களுக்கு கிழமைக்கு 20 ரூபாய்க்கு பொருட்கள் தருகிறார்கள்.

"நாங்கள் கிழமையில் 7 நாட்கள் வேலை செய்தும் சரியான முறையில் எங்கள் ஊதியத்தைப் பெற முடியாமல் கஷ்டப்படுகிறோம். இரத்தக்கண்ணீர் வடிக்கிறோம்.

"எங்களுக்கு இந்த நிலைமையிலிருந்து விடுதலை அளிக்குமாறு மிகத் தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறோம்." — இப்படி அகதிகள் தமது மகஜரில் குறிப்பிட்டிருக்கிறார்கள்.

(உ-8)

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்